வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 160 of 2014

வழக்கு சாட்சி - PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சங்கரன் | தொழில் | : | கம்பெனிக்கு வேலைக்கு செல்கிறேன் |
| தந்தை பெயர் | : | கருப்புசாமி | வயது | : | |
| கிராமம் | : | கணபதிபாளையம் | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 21.07.2025.

(எதிரிகள் ஆஜர்.).

**முதல் விசாரணை தொடர்ச்சி** : நாள் : 21.07.2025.

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கம்பெனி வேலைக்கு செல்கிறேன் வருகிறேன். கடந்த 12.09.2009 ஆம் பல்லடத்தில் உள்ள மனப்புறம் பைனான்சில் 3.2 கிராம் தோடு மற்றும் கம்மலுடன் அடகு வைத்து ரூ.3600 பெற்றேன். பிறகு 01.11.2009 ஆம் தேதி பேங்கில்இருந்து என்னை கூப்பிட்டார்கள். நான் என்வென்று விசாரித்தப்போது நான் அடகு வைத்த கம்மல் மற்றும் தோடு காணவில்லை என்றும் கையாடல் செய்துள்ளதாக சொன்னார்கள். மொத்தம் 71 கிராம் காணவில்லை என்று சொன்னார்கள். இது சம்மந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள்தரப்பு குறுக்கு விசாரணை** :

1) நான் நகையை அடகுவைத்ததற்கு இரசீது கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். அந்த இரசீதில் எந்த தேதியில் என்ன வகையான நகை எவ்வளவு தொகை என்பது சொல்லப்பட்டுள்ளதா எனறால் சொல்லப்பட்டுள்ளது. போலீசார் என்னிடம் விசாரிக்கும் போத இரசீது சம்மந்தமாக கேட்டார்களா என்றால் ஞாபகம் இல்லை. போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள்.

நான் அன்றை தினம் வங்கிக்கு சென்றேனா என்றால் சென்றேன். நகை 71 கிராம் காணவில்லை என்று சொன்னதற்கான ஆவணம் எதும் என்னிடம் காட்டப்பட்டதா என்றால் இல்லை. கேரளாவில் இருந்த வந்த ஆடிடர் சொன்னதன் அடிப்படையில்எனக்கு தகவல் தெரியும் என்றால் சரிதான். ஏற்கனவே நான் அந்த வங்கியின் வாடிக்ககையாளர் என்றால் சரிதான். வங்கி மேளாளர் கேட்டக்கொண்டதற்கினங்க பொய் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

தற்போது என்னிடம் காட்டப்படும் நான் நகையை அடமானம் வைத்து ரூ 3600/- பெற்றதற்கான இரசீதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த இரசீது புகைப்பட நகல் **அ.த.சா.ஆ.2 ஆகும்.**( எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி ஆவணமானது நகல் என்பதால் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது

**மறு குறுக்கு விசாரணை**

**1)** இந்த நகையை எந்த தேதியில் அடகுவைத்தேன் என்றால் 12.09.2009 ஆம் தேதி வைத்தேன். சாட்சியிடம் ஆவணம் காண்பித்து எனக்கு கொடுத்ததாக சொல்லப்படும் இரசீதில் வங்கி மேளாளரின் கையெழுத்து மற்றும் சீல் இருந்ததா என்றால் இருந்தது என்று சாட்சியம் அளித்து விட்டு மீண்டும் சாட்சி இல்லை என்கிறார் ரொம்ப நாள் ஆனதால் ஞாபகம் இல்லை என்று சாட்சியம் அளிக்கிறார். இந்த ஆவணம் எல்லாம் பின்னிட்டு என்னிடம் கையெழுத்து வாங்கப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.07.21 07:22:31 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.